**கல்விப் பொது தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2019**

**87 - தொடர்பாடலும் ஊடகக்கற்கையும்**

## தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் I

**1 ஆம் வினாத்தாளின் 40 வினாக்கள்**

$1 \times 40 = 40$ புள்ளிகள்

## தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் II

**1 ஆம் வினா கட்டாயமானது**

ஒவ்வொரு பிரிவுக்கும் 2 புள்ளிகள் விதம் பத்து வினாக்கள் $2 \times 10 = 20$ புள்ளிகள்

**2 முதல் 7 ஆம் வினாக்கள்**

தெரிவு செய்யப்பட்ட 4 வினாக்களுக்கு $4 \times 10 = 40$ புள்ளிகள்

மொத்தம் 100 புள்ளிகள்

**பகுதி வினாக்களுக்கான புள்ளிகள்**

(2 ஆம் வினாவில் இருந்து 7 ஆம் வினா வரை)

| | | |
|---|---|---|
| (i) - | பகுதி | 01 புள்ளிகள் |
| (ii) - | பகுதி | 02 புள்ளிகள் |
| (iii)- | பகுதி | 03 புள்ளிகள் |
| (iv)- | பகுதி | 04 புள்ளிகள் |
| | | 10 புள்ளிகள் |

| | | |
|---|---|---|
| **வினாத்தாள் I** | **மொத்தம்** | **40 புள்ளிகள்** |
| **வினாத்தாள் II** | **மொத்தம்** | **60 புள்ளிகள்** |
| | | **100 புள்ளிகள்** |

# க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2019
## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, ஒப்பம் இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ............................................................ ✓ $\frac{4}{5}$
............................................................
............................................................

(ii) ............................................................ ✓ $\frac{3}{5}$
............................................................
............................................................

(iii) ............................................................ ✓ $\frac{3}{5}$
............................................................
............................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. புள்ளி வழங்கும் திட்டத்தின் படி சரியான தெரிவைத் துளைத்தாளில் அடையாளமிடவும். அவ்வாறு அடையாளமிடப்பட்ட இடத்தை வெட்டி நீக்கித் துளைத்தாளைத் தயாரிக்கவும். துளைத்தாளை விடைகளின் மீது சரியாக வைத்துக்கொள்ளக்கூடியதாகச் சுட்டெண் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான விடைகளின் எண்ணிக்கையைக் காட்டும் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான, பிழையான விடைகளை குறிப்பிடக்கூடியதாக ஒவ்வொரு வரிசைக்கும் இறுதியில் வெற்று நிரையொன்றை வெட்டி ஏற்படுத்திக் கொள்ளவும். **வெட்டிக்கொண்ட துளைத்தாளில் பிரதம பரீட்சகரிடம் கையொப்பம் பெற்று அங்கீகரித்துக் கொள்ளவும்.**

2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.

3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் எழுதவும். அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும். புள்ளி பரிவர்த்தனை செய்யும் சந்தர்ப்பங்களில் பரிவர்த்தனை செய்யப்பட்ட புள்ளியை உரிய கூட்டினுள் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை மற்றும் கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். **பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.**
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக **2 இலக்கங்களில் பதியவும்.** வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

✶ **புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

ஒரு வினாப்பத்திரம் உள்ள பாடங்கள் தவிர ஏனைய சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியான புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். வினாப்பத்திரம் I இற்கான புள்ளி வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளிப்பட்டியலில் "**Total Marks**" என்ற நிரலில் **பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும்.** வினாப்பத்திரம் II இற்கான புள்ளி வினாப்பத்திரம் II இற்குரிய புள்ளி பட்டியலில் பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி இறுதிப்புள்ளியை புள்ளிப்பட்டியலின் "**Total Marks**" என்ற நிரலில் பதியவும். 43 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் "**Total Marks**" என்ற நிரலில் பதிந்து **எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.**

21 - சிங்களமொழியும் இலக்கியமும், 22 - தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய இரு பாடங்களும் வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளி புள்ளிப்பட்டியலில் "**Total Marks**" என்ற நிரலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். வினாப்பத்திரம் II, III இற்கான புள்ளிகளை தனி தனியான புள்ளித்தாளில் பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி "**Total Marks**" எனும் நிரலில் பதிதல் வேண்டும்.

**முக்கியக் குறிப்பு :**

சகல சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய முழுப்புள்ளியானது **முழுத்தானத்தில்** வினாப்பத்திரம் I, II மற்றும் III என்ற புள்ளி பட்டியலின் உரிய நிரலில் நிரலில் உரிய வகையில் பதிதல் வேண்டும். எந்தவிதமான காரணங்களிற்காகவும் வினாப்பத்திரத்தின் இறுதிப்புள்ளியானது **தசம தானங்களில் பதியப்படலாகாது.**

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**87 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2019 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2019 டிசெம்பர்
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2019**

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය I, II
தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் I, II
Communication and Media Studies I, II

**06.12.2019 / 0830 - 1140**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் I

**கவனிக்க :**

(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**
(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** "புகையிரதத்தின் ஜன்னல் வழியாகத் தொலைவில் தோன்றும் மலைத்தொடர்கள் அழகானவை. அதன் மூலம் மனதிற்கு உற்சாகம் ஏற்படும்." இக்கூற்று தொடர்புறுவது,
(1) ஆளுள் தொடர்பாடலுடனாகும். (2) ஆளிடைத் தொடர்பாடலுடனாகும்.
(3) குழுத் தொடர்பாடலுடனாகும். (4) வெகுசனத் தொடர்பாடலுடனாகும்.

**2.** இலங்கையின் முதலாவது செய்திப்பத்திரிகையாக அமைவது,
(1) லங்காலோகய ஆகும். (2) கொழும்பு ஜேர்னல் ஆகும்.
(3) உதய தாரகை ஆகும். (4) சிலோன் கவர்மென்ட் கெசட் ஆகும்.

**3.** வன்செய்திகள் பெரும்பாலும் காணக்கிடைப்பது, செய்திப்பத்திரிகையில்
(1) முதற் பக்கத்திலாகும். (2) நடுப் பக்கத்திலாகும்.
(3) இறுதிப் பக்கத்திலாகும். (4) தெரிவுசெய்யப்பட்ட பக்கத்திலாகும்.

**4.** பாடசாலையின் விழா (concert) தொடர்பில் கிராம மக்களுக்குத் தகவல் வழங்க மிகவும் பொருத்தமான குழுத் தொடர்பாடல் முறை
(1) தனிப்பட்ட கடிதங்கள் மூலம் தகவல் வழங்குதல்
(2) அன்றாடம் செய்திப்பத்திரிகையில் விளம்பரம் ஒன்றைப் பிரசுரித்தல்
(3) வீடு வீடாகச் சென்று கையேடுகளைப் பகிர்ந்தளித்தல்
(4) ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட நடமாடும் வாகனமொன்றைப் பயன்படுத்தல்

**5.** வானொலி ஊடகத்தின் பலவீனமாக அமைவது
(1) நேரடி ஊடகமாகக் காணப்படல்
(2) உடனடியாக கேட்போருடன் தொடர்புகொள்ளும் ஊடகமாகக் காணப்படல்
(3) புவியியல் தடைகள் இழிவளவாகக் காணப்படல்
(4) ஒலியை அடிப்படையாகக் கொண்ட ஊடகமாகக் காணப்படல்

**6.** பின்வருவோருள் தொடர்பாடல் பற்றிய கணித மாதிரியை முன்வைப்பதில் பங்காற்றியவர் யார் ?
(1) எட்வர்ட் ஹாபர் (2) வொரன் வீவர்
(3) ஹியூ க்ளிபர்ட் (4) ஹரோல்ட் டீ லாஸ்வெல்

**7.** வாய்மொழியல்லாதத் தொடர்பாடலுக்கு உதாரணமாக அமைவது
(1) பாடலொன்றைப் பாடுதல்
(2) மதப் போதனையொன்றை நடாத்துதல்
(3) செய்திப்பத்திரிகையொன்றின் தலைப்புச் செய்தி
(4) அரிச்சுவடியில் எழுத்துகளை வாசித்தல்

**8.** செய்தி அறிக்கையிடல் தொடர்பான சந்தர்ப்பத்தில் முழுமையான சாராம்சம் உள்ளடக்கப்படுவது, அதன்
(1) உடலில் (2) முதற் பந்தியில்
(3) இறுதியில் (4) தலைப்புச் செய்தியில்

**9.** வானொலி ஊடகத்தில் 'ஒருமுறை மாத்திரம் செவிமடுக்கக்கூடியது' என்னும் பலவீனத்தைத் தவிர்த்துக்கொள்ள பிரதி எழுதும்போதான பணியில் **பொருத்தமற்ற** செயற்பாடாக அமைவது
(1) வசன முடிவின்போது நிறுத்தற் குறிகளை இடுதல்
(2) தொழினுட்ப அறிவுறுத்தல்களைப் பிரதியில் சேர்த்தல்
(3) தொழினுட்ப மொழியினைப் பயன்படுத்தல்
(4) சுருக்கக் குறியீடுகள் பயன்படுத்துவதைத் தவிர்த்தல்

**10.** ஒருவரை மையமாகக் கொண்டு பலருக்குத் தகவல் பரவிச் செல்லும் முறைசார் தொடர்பாடல் மாதிரி எது ?
(1) வட்ட மாதிரி (2) சங்கிலி மாதிரி
(3) Y மாதிரி (4) சக்கர மாதிரி

**11.** இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது ?
(1) 1976 (2) 1979 (3) 1980 (4) 1982

**12.** இலங்கையில் ஊடகப் பாவனையுடன் தொடர்புடைய ஒழுக்கநெறிக் கோவைகள் தயாரிப்புடன் தொடர்புடைய சட்டம்,
(1) தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஆகும்.
(2) இலங்கைப் பத்திரிகைப் பேரவைச் சட்டம் ஆகும்.
(3) புலமைச் சொத்துச் சட்டம் ஆகும்.
(4) பொது அளிக்கைக் கட்டளைச் சட்டம் ஆகும்.

**13.** கணினியின் துணையின்றி வகுப்பறையொன்றினுள் பயன்படுத்தக்கூடிய எறிவை ஊடக உபகரணமாவது,
(1) ஊடாடுகைப் பலகை ஆகும். (2) பல்லூடக எறிவை ஆகும்.
(3) பக்கப்புரட்டி ஆகும். (4) துரித எறிவை ஆகும்.

**14.** பாடசாலையின் பரிசளிப்பு விழாவின்போது பெற்றுக்கொள்ளப்பட்ட புகைப்படமொன்று கமரா திரையில் மிகவும் தெளிவாகக் காட்சியளித்தபோதிலும் அதனைக் கணினித் திரையில் பார்வையிடும்போது தெளிவற்றதாகக் காணப்பட்டது. அதில் தாக்கம் செலுத்தியிருக்கக்கூடிய காரணம்
(1) பிரிதிறன் குறைவாகக் காணப்பட்டமை
(2) அளவீடுகள் சரியானதாக அமையாமை
(3) துவாரப் படலை வேகம் (shutter speed) குறைவாகக் காணப்பட்டமை
(4) புகைப்பட நாடா உணர்திறன் வேகம் உயர்வாகக் காணப்பட்டமை

**15.** புகைப்படப்பிடித்தல் செயற்பாட்டின்போது ஒளியைக் கட்டுப்படுத்தல் தொடர்பில் அடிப்படையில் தாக்கம் செலுத்துவது,
(1) கமராக் கோணம் ஆகும். (2) காட்சித்தள ஆழம் ஆகும்.
(3) புகைப்பட உருவகப்படுத்தல் ஆகும். (4) துவாரப் படலை வேகம் ஆகும்.

**16.** ஊடகம் என்பது கைத்தொழிலாகும். அதன் அடிப்படைப் பண்பாக அமைவது
(1) சந்தைப்படுத்தலின் பின்னர் சேவை வழங்குதல்
(2) பெறுநரது கருத்துகளுக்கேற்ப செய்தித் தயாரித்தல்
(3) பங்கிலாபத்தைப் பெறுநரிடையே பகிர்ந்தளித்தல்
(4) துணைப் பண்பாடுகள் தொடர்பாக அவதானமாயிருத்தல்

**17.** ஆண் - பெண் சமூகத்தன்மை எனும் எண்ணக்கரு,
(1) பாரம்பரியம் சார்ந்ததாகும். (2) சமூக விஞ்ஞானம் சார்ந்ததாகும்.
(3) உயிரியல் விஞ்ஞானம் சார்ந்ததாகும். (4) உளவியல் சார்ந்ததாகும்.

**18.** வெகுசன ஊடக நிறுவனமொன்றின் உரித்துடைமை பிரதிநிதித்துவம் பெறுவது,
(1) வெகுசன ஊடகவியலாளர் மூலமாகும். (2) பொதுமக்கள் மூலமாகும்.
(3) விளம்பரதாரர்கள் மூலமாகும். (4) பணிப்பாளர்கள் மூலமாகும்.

**19.** சுயாதீன தொலைக்காட்சி சேவை செயற்படுவது
(1) அரச கம்பனியாக (2) அரச கூட்டுத்தாபனமாக
(3) தனியார் அலைவரிசையாக (4) பொதுமக்கள் ஒழுங்கமைப்பாக

**20.** செய்திப்பத்திரிகையின் உள்ளடக்கத்தின் பிரதான பகுதிகளாக அமைவன,
(1) செய்தி, சிறப்புக் கட்டுரைகள், விளம்பரங்கள் என்பனவாகும்.
(2) செய்தி, ஆசிரியர் தலையங்கம், புகைப்படங்கள் என்பனவாகும்.
(3) செய்தி, கேலிச் சித்திரம், விளம்பரங்கள் என்பனவாகும்.
(4) செய்தி, பத்தி எழுத்து, கேலிச் சித்திரம் என்பனவாகும்.

**21.** நீங்கள் நூலகத்திலுள்ள வாசிப்பு மண்டபத்தில் நூலொன்றை வாசித்துக்கொண்டிருக்கும்போது, ஓசை மௌனிக்கப்பட்ட (silent mode) உங்களது கைத்தொலைபேசிக்கு நெருக்கமான ஒருவரிடமிருந்து அழைப்பொன்று வருகிறது. இச்சந்தர்ப்பத்தில் மிகவும் பொருத்தமான துலங்கலாக அமைய வேண்டியது
(1) அழைப்பை அப்பொழுதே பெற்றுக்கொள்ளுதல்
(2) அழைப்பைப் பெற்றுக்கொள்ளாது துண்டித்தல்
(3) அழைப்பைப் பெற்றுக்கொண்டு வேலைப்பளு எனக் கூறுதல்
(4) அழைப்பைப் பெற்றுக்கொள்ள வாசிப்பு மண்டபத்திலிருந்து வெளியே செல்லுதல்

**22.** பெற்றுக்கொள்ளப்பட்ட புகைப்படமொன்றை அக்கணமே பார்வையிடக் கூடியவாறு கிடைக்கப்பெறுவது,
(1) இலக்கமுறைப் புகைப்படக்கலை (digital photography) மூலமாகவாகும்.
(2) இரசாயனமுறைப் புகைப்படக்கலை மூலமாகவாகும்.
(3) புகைப்படத்தின் உரு பதிவுக் கோப்பு மாதிரி மூலமாகவாகும்.
(4) தனி வில்லை எதிர்விம்பக் கமரா (SLR) புகைப்படம் மூலமாகவாகும்.

**23.** துல்லியத் தன்மை + நடுநிலைத் தன்மை + தெளிவான தன்மை = நம்பகத்தன்மை
செய்தி அறிக்கையிடல் தொடர்பான மேற்படி சமன்பாட்டினை முன்வைத்தவர்,
(1) சார்ள்ஸ் டானா ஆவார். (2) போல் டி மெசுனியர் ஆவார்.
(3) மில்டன் புஷ் ஆவார். (4) கேப்பிரியேல் ஸ்கேத் ஆவார்.

**24.** பாடசாலையொன்றில் இடம்பெறும் மர நடுகை நிகழ்ச்சிப் பற்றி அவ்விடத்திற்குச் சென்று வானொலி ஒலிபரப்பின் மூலமாகத் தகவலை முன்வைப்பதற்காக சஞ்சீவவிற்கு அறிவுரை வழங்கப்படுகிறது. இவ்வானொலி நிகழ்ச்சி உள்ளடங்கும் மாதிரி யாது ?
(1) அறிவிப்பு ஆகும். (2) நேரடி வர்ணனை ஆகும்.
(3) நேரடிக் காட்சி ஆவணம் ஆகும். (4) செய்தி ஆகும்.

**25.** புலமைச் சொத்துச் சட்டத்தின் மூலம் படைப்பாளியின் இரண்டு வகையான உரிமைகள் பாதுகாக்கப்படும். அவையாவன,
(1) பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் என்பனவாகும்.
(2) சமூக மற்றும் பண்பாட்டு உரிமைகள் என்பனவாகும்.
(3) பண்பாட்டு மற்றும் ஒழுக்க உரிமைகள் என்பனவாகும்.
(4) ஒழுக்க மற்றும் பொருளாதார உரிமைகள் என்பனவாகும்.

**26.** வெளியீடொன்றின் பக்கங்களுக்கு பக்க எண் இடல், உள்ளடக்கத்தைத் தொகுத்தல், முதற் பக்கம் மற்றும் இறுதிப் பக்கம் என்பவற்றை ஒழுங்கமைத்தல், அட்டைப் பக்கங்களை வடிவமைத்தல் போன்ற பணிகள் உள்ளடங்குவது,
(1) வெளியீட்டின் இறுதி நடவடிக்கைகளிலாகும்.
(2) எழுத்துருவாக்கலில் (Type setting) மற்றும் பக்க வடிவமைப்பிலாகும்.
(3) கைப்பிரதி தயாரிக்கும் செயன்முறையிலாகும்.
(4) அச்சுப்பதித்தல் மற்றும் பிரதிகள் எடுத்தலிலாகும்.

**27.** ஊடுகடத்தித் தாள் பயன்படுத்தக்கூடிய எறிவை உபகரணமாக அமைவது,
(1) மேந்தலை எறிவை ஆகும்.
(2) பல்லூடக எறிவை ஆகும்.
(3) வழுக்கி எறிவை / பட எறிவை ஆகும்.
(4) ஊடாடுகைப் பலகை ஆகும்.

**28.** வெகுசன ஊடக நிறுவனங்களின் செயற்பாட்டில் அரசின் பொறுப்பாக **அமையாதது** பின்வருவனவற்றுள் எது ?
(1) அவசர நிலைமைகளின்போது செய்தி மற்றும் தகவல்களைக் கட்டுப்படுத்தல்
(2) நியதிகளின்கீழ் ஊடக நிறுவனங்களிடம் வரி அறவிடுதல்
(3) ஊடகச் செயற்பாட்டின்மீது அனைத்து சந்தர்ப்பங்களிலும் நேரடியாகத் தலையிடுதல்
(4) அரசின் வினைத்திறனின்மை பற்றி மக்களுக்குத் தெரியப்படுத்தல்

**29.** அரசியல்வாதி ஒருவர் கூட்டமொன்றில் உரையாற்றிக்கொண்டிருக்கும்போது செவிமடுப்போர் கூட்டத்தின் மத்தியிலிருந்து உற்சாகக் குரல் கேட்டது. செவிமடுக்கும் பிரிவினர் பிரதிநிதித்துவம் செய்யும் வாய்மொழியல்லாத தொடர்பாடல் 'இடைவெளி' எது ?
(1) சமூக இடைவெளியாகும். (2) தனியாள் இடைவெளியாகும்.
(3) நேச இடைவெளியாகும். (4) பொது இடைவெளியாகும்.

**30.** 'அச்சுக் கடிதம்' ஒன்றை அவ்விதமாகவே வெளிநாடொன்றுக்குத் துரிதமாக அனுப்பக்கூடிய விதிமுறையாக அமைவது
(1) தொலைநகல் கருவி மூலமாக (2) மின்னஞ்சல் மூலமாக
(3) கடிதம் மூலமாக (4) கைத்தொலைபேசி மூலமாக

**31.** மனித உரிமைகள் பற்றிய சர்வதேச சாசனத்தின் 19 ஆவது சரத்தில் உள்ளடங்கியுள்ள உரிமைகள் சில கீழே காணப்படுகின்றன.

A - தமது கருத்தைச் சுதந்திரமாகக் கொண்டிருக்க முடியும்.
B - தமது கருத்தைச் சுதந்திரமாக வெளிப்படுத்த முடியும்.
C - தேச எல்லைகளைக் கருத்திற் கொள்ளாது ஏதேனும் ஊடகத்தின் மூலமாக தகவல்களைப் பெறவும் வழங்கிடவும் முடியும்.


மேற்காணும் நிலைமையை 1978 ஆம் ஆண்டு இலங்கை அரசியல் யாப்பின் 14 (1) (அ) உபசரத்துடன் ஒப்பிடுகையில் ஒருமித்த தன்மை காணக்கிடைப்பது,
(1) A யுடன் மட்டும் (2) B யுடன் மட்டும்
(3) C யுடன் மட்டும் (4) A மற்றும் B யுடன் மட்டும்

**32.** மண்வெட்டியொன்றைச் சந்தைப்படுத்தும் நோக்கில் தயாரிக்கப்பட்ட விளம்பரமொன்றில் விவசாயி ஒருவர் வயலில் வேலை செய்துகொண்டிருக்கும்போது விவசாயியின் மனைவி உணவு கொண்டுவரும் விதம் சித்திரிக்கப்பட்டிருந்தது. இச்சந்தர்ப்பத்தைக் கற்பதற்கு மிகவும் பொருத்தமான எண்ணக்கருவாக அமைவது,
(1) இனத்துவம் (2) ஆண் - பெண் சமூகத்தன்மை
(3) குடியுரிமை (4) மனித உரிமைகள்

**33.** கீழ்க்காணும் கூற்றுகளுள் புதிய ஊடகத்தின் இயல்பு பற்றி **இழிவளவான** பொருத்தப்பாடு காணப்படும் கூற்று எது ?
(1) அதில் புவியியல் எல்லைகள் காணப்படாது.
(2) அது பூகோளப் பரவலைக் கொண்டது.
(3) இலக்கமுறை ஊடக உபகரணங்கள் பயன்படுத்தப்படும்.
(4) அனைத்து பெறுநர்களுக்கும் ஒரே தகவல் கிடைக்கப்பெறும்.

**34.** புகைப்படவியலின்போது தனிப்பட்ட பார்வையை உட்சேர்ப்பதற்கு இயலுமாக இருப்பது,
(1) வெகுசன ஊடகவியலாளர் ஒருவர் செய்திப் புகைப்படம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளும்போதாகும்.
(2) காப்புறுதிப் பிரதிநிதி ஒருவர் வாகன விபத்தொன்றைப் புகைப்படம் எடுக்கும்போதாகும்.
(3) பொலிஸ் அதிகாரி ஒருவர் குற்றம் நடைபெற்ற இடமொன்றைப் புகைப்படம் எடுக்கும்போதாகும்.
(4) புகைப்படக் கலைஞரொருவர் கண்காட்சிக்காகப் புகைப்படங்கள் பெற்றுக்கொள்ளும்போதாகும்.

● படத்தில் காட்டப்பட்டிருப்பது செய்திப்பத்திரிகையொன்றில் செய்தி அறிக்கையிடலுடன் தொடர்புடைய தலைகீழ் பிரமிட் ஆகும். இப்படத்தைப் பயன்படுத்தி **35, 36** ஆகிய வினாக்களுக்கு விடையளிக்குக.




**35.** இப்பிரமிட்டில் செய்திப் பற்றிய 5WH தொடர்புபடுகின்ற விடயங்கள் உள்ளடங்குவது,
(1) B யிலாகும். (2) C யிலாகும். (3) A, B யிலாகும். (4) B, C யிலாகும்.

**36.** செய்திப்பத்திரிகையில் வெளி தொடர்பான சிக்கல் ஏற்படும்போது ஆசிரியரால் நீக்கப்படுவதற்கு அதிகளவில் சாத்தியம் காணப்படுவது,
(1) B ஆகும். (2) C ஆகும்.
(3) A மற்றும் B ஆகும். (4) B மற்றும் C ஆகும்.

**37.** ஹரோல்ட் டீ லாஸ்வெல் தொடர்பாடல் மாதிரியில் காணப்படும் பிரதான கூறுகள் ஐந்தில், தொடர்பாடுநர் தவிர்ந்தவிடத்து ஏனைய கூறுகள் முறையே,
(1) ஊடகம், செய்தி, தாக்கம், பெறுநர் என்பனவாகும்.
(2) தாக்கம், பெறுநர், ஊடகம், செய்தி என்பனவாகும்.
(3) செய்தி, ஊடகம், பெறுநர், தாக்கம் என்பனவாகும்.
(4) செய்தி, பெறுநர், ஊடகம், தாக்கம் என்பனவாகும்.

**38.** விரிவுரையொன்று நடாத்துதல் பற்றிய **தவறான** கூற்றைத் தெரிவுசெய்க.
(1) அது வாய்மொழித் தொடர்பாடல் சந்தர்ப்பத்திற்கான உதாரணமாகும்.
(2) அதில் வாய்மொழியல்லாதத் தொடர்பாடல் சந்தர்ப்பங்களைக் காணலாம்.
(3) உச்சரிப்பு எப்பொழுதும் வாய்மொழித் தொடர்பாடலுக்கு உரியதாகும்.
(4) வாய்மொழியல்லாதத் தொடர்பாடல் மூலம் வாய்மொழித் தொடர்பாடல் பலமடைகிறது.

**39.** தொலைக்காட்சி நாடகங்களின் (Tele dramas) பண்புகள் சில கீழே காணப்படுகின்றன.
A - குறைந்த செலவில் அதிகளவான பகுதிகளைத் தயாரித்தல்
B - தயாரிப்புப் பணிகள் பூர்த்தியடைவதற்கு முன்னர் ஒளிபரப்பு ஆரம்பமாதல்
C - கலையகத்தில் மாத்திரம் படப்பிடிப்பு மேற்கொள்ளப்படல்
D - ஒவ்வோர் அங்கத்திலும் கதைக்கரு மாற்றமடைதல்

மேற்காணும் பண்புகளில் தொலைக்காட்சி மெகா நாடகங்கள் வெளிப்படுத்தும் பண்புகள் உள்ளடங்குவது,
(1) A, B என்பவற்றிலாகும். (2) A, D என்பவற்றிலாகும்.
(3) B, C என்பவற்றிலாகும். (4) C, D என்பவற்றிலாகும்.

**40.** கீழ்க் காணப்படுவது மீனா பற்றிய மூன்று கூற்றுகளாகும்.
A - மீனா தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலிருந்து தனக்குரிய ஆடை வடிவமைப்பினைத் தெரிவுசெய்து கொள்வாள்.
B - இரவு வேளைகளில் ஒளிபரப்பாகும் மெய்மை நிகழ்ச்சிகளைப் (Reality Programmes) பார்வையிடுவதற்காக அவள் நேரத்திற்கு முன்பதாகவே இரவு உணவை உண்பாள்.
C - புதிய பாணியின் இசை மிகவும் கவர்ச்சியானது என்பது அவளது கருத்தாகும்.

பெறுநர் என்ற வகையில் மீனா வெளிக்காட்டும் ஊடகத் தாக்கத்தின் பண்புகளை ஒழுங்குமுறையில் வெளிப்படுத்துவனவற்றைத் தெரிவுசெய்க.
(1) நடத்தைசார் மாற்றம், அன்றாட நிகழ்ச்சிநிரலைத் தயாரித்தல், மனப்பாங்குசார் மாற்றம்
(2) அன்றாட நிகழ்ச்சிநிரலைத் தயாரித்தல், மனப்பாங்குசார் மாற்றம், நடத்தைசார் மாற்றம்
(3) மனப்பாங்குசார் மாற்றம், நடத்தைசார் மாற்றம், அன்றாட நிகழ்ச்சிநிரலைத் தயாரித்தல்
(4) நடத்தைசார் மாற்றம், மனப்பாங்குசார் மாற்றம், அன்றாட நிகழ்ச்சிநிரலைத் தயாரித்தல்

**

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

රහස්‍යයි
அந்தரங்கமானது

අ.පො.ස. (සා.පෙළ) විභාගය - 2019
க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2019

| විෂයය අංකය / பாட இலக்கம் | 87 | විෂයය / பாடம் | தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் |
|---|---|---|---|

I පත්‍රය - පිළිතුරු
I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 1 | 11. | 4 | 21. | 4 | 31. | 2 |
| 02. | 2 | 12. | 2 | 22. | 1 | 32. | 2 |
| 03. | 1 | 13. | 4 | 23. | 2 | 33. | 4 |
| 04. | 4 | 14. | 1 | 24. | 2 | 34. | 4 |
| 05. | 4 | 15. | 4 | 25. | 4 | 35. | 3 |
| 06. | 2 | 16. | 2 | 26. | 2 | 36. | 2 |
| 07. | 4 | 17. | 2 | 27. | 1 | 37. | 3 |
| 08. | 2 | 18. | 4 | 28. | 3 | 38. | 3 |
| 09. | 3 | 19. | 1 | 29. | 4 | 39. | 1 |
| 10. | 4 | 20. | 1 | 30. | 1 | 40. | 1 |

විශේෂ උපදෙස් } එක් පිළිතුරකට ලකුණු **01** බැගින්
விசேட அறிவுறுத்தல் } ஒரு சரியான விடைக்கு **01** புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் **01 × 40 = 40**

---

පහත නිදසුනෙහි දැක්වෙන පරිදි බහුවරණ උත්තරපත්‍රයේ අවසාන තීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව / சரியான விடைகளின் தொகை: $\frac{25}{40}$

I පත්‍රයේ මුළු ලකුණු / பத்திரம் I இன் மொத்தப்புள்ளி: $\frac{25}{40}$

# புதிய பாடத்திட்டம்
# தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் II

**1.** "ஆகாயத்தில் பயணம் செய்ய கிடைத்தால்..." எனும் தலைப்பில் நிலா எழுதிய கட்டுரை 'முன்நோக்கி' எனும் சிறுவர் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளதாக அதிபர் காலைநேர ஒன்றுகூடலின்போது மகிழ்ச்சியுடன் அறிவித்தார்.

(i) மேற்கூறப்பட்ட கருப்பொருளின்படி கட்டுரையை எழுதுவதற்கு நிலாவிற்கு உதவியது எவ்வகையான தொடர்பாடல் வகை ?

– **ஆளுள் தொடர்பாடல் / அகமுகித் தொடர்பாடல்.**

(ii) 'கட்டுரை' உள்ளடங்கும் பிரதான தொடர்பாடல் வடிவம் எது ?

– **எழுத்துமூலத் தொடர்பாடல்.**

(iii) செய்திப்பத்திரிகை உள்ளடங்கும் தொடர்பாடல் வகைக்கு உரிய, குறிக்கப்பட்ட கால இடைவெளிகளில் வெளியிடப்படும் வேறு ஊடகம் ஒன்றைப் பெயரிடுக.

**சஞ்சிகை.**

(iv) அதிபர் தொடர்புபடும் தொடர்பாடல் வகை எது ?

**குழுத் தொடர்பாடல் / கூட்டுத் தொடர்பாடல் / சமூகத் தொடர்பாடல்.**

(v) செய்திப்பத்திரிகை அறிக்கையிடலில் 'கருப்பொருளை' அறிமுகம் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் பதம் யாது ?

– **தலைப்புச் செய்தி.**
– **செய்திச் சுருக்கம்.**
– **செய்திச் சாராம்சம்.**

(vi) செய்திப்பத்திரிகையொன்றின் உள்ளடக்கம் பல்வேறு வடிவங்களினூடாக முன்வைக்கப்படும். மேற்காணும் கட்டுரை அவற்றுள் எவ்வடிவத்துக்கு உரித்தாகின்றது ?

**விசேட கட்டுரை / சிறப்புக் கட்டுரை.**

(vii) மேற்காணும் கட்டுரை இலங்கை அரசாங்கத்திற்குரிய செய்திப்பத்திரிகையொன்றில் பிரசுரிக்கப்பட்டிருந்தால் அந்நிறுவனம் எதுவாக இருக்கலாம் ?

**லேக்ஹவுஸ் நிறுவனம் / ஏரிக்கரை நிறுவனம் (ANCL).**

(viii) நிலா, இக்கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தில் வானொலி நிகழ்ச்சியொன்றைத் தயாரிக்க எண்ணியுள்ளார். அதன்போது அவர் பயன்படுத்தக்கூடிய ஒலி விளைவுகள் (sound effects) **இரண்டினை** முன்மொழிக.

**குரல் ஒலி, இயற்கை ஒலி, இசை, நிசப்தம் (அமைதி).**

(ix) வகுப்பறைகளில் காட்சிப்படுத்துவதற்காக நிலாவின் செய்திப்பத்திரிகைக் கட்டுரை நிழற்பிரதிகள் எடுக்கப்பட்டு ஆசிரியர் குழாத்தினரிடம் பகிர்ந்தளிக்கப்பட்டது. இதற்காக அவர்கள் பயன்படுத்தக்கூடிய எறிவையற்ற ஊடக உபகரணங்கள் **இரண்டினைப்** பெயரிடுக.

– **அறிவித்தல் பலகை, காந்தப் பலகை.**

(x) ஊடகத்தைப் பயன்படுத்தும்போது நிலா தனது கற்பனையைச் சிறப்பாகப் பயன்படுத்துவதாக அதிபர் தெரிவித்தார். 'கற்பனை' என்பதைச் சுருக்கமாக விளக்குக.

**புலக்காட்சிகளை உருவாக்கிக் கொள்ளும் ஆற்றல்.**

**(மொத்தப்புள்ளிகள் 2 x 10 = 20 புள்ளிகள்)**

**2.** அமரா தனது பள்ளித் தோழியான லக்ஷ்மிக்குத் தொலைபேசியில் அழைப்பு எடுத்து தன்னால் தவறவிடப்பட்ட செவிப்புல - கட்புல உபகரணங்கள் பாடம் பற்றிய விடயங்களைக் கேட்டறிந்தார்.

(i) வானொலியில் இடம்பெறும் தொலைபேசி உரையாடல் நிகழ்ச்சி வடிவத்தின் சிறப்பம்சங்கள் **இரண்டினைப்** பெயரிடுக.

1. **உடனடியாகத் தொடர்புகொள்ளும் ஆற்றல் காணப்படுதல்.**
2. **நாட்டின் எப் பிரதேசத்தில் இருந்தும் தொடர்புகொள்ளும் ஆற்றல் காணப்படுதல்.**
3. **அதிகமானோர் தொடர்புகொள்ளும் சந்தர்ப்பம் காணப்படுதல்.**
4. **நேரடியாகத் (Live) தொடர்புகொள்ளும் ஆற்றல் காணப்படுதல்.**

(1/2 × 2 = 1 புள்ளி)

(ii) இருவழித் (இருநிலை) (dyadic communication) தொடர்பாடலின் தேவை தொடர்பாக **இரண்டு** விடயங்களினூடாக விளக்குக.

1. அன்பு, இரக்கம் ஆகியவற்றைப் பரிமாற்றம் செய்யலாம்.
2. சமூகமய இயல்பினைப் பெற்றிடலாம்.
3. பணியொன்றை நிறைவு செய்திடலாம்.
4. கருத்துக்கள், தகவல்களைப் பரிமாற்றிக்கொள்ளலாம்.
5. கற்கவும் / கற்பிக்கவும் முடியும்.
6. தூண்டலை ஏற்படுத்திக்கொள்ளலாம்.
7. உளரீதியாகக் குணமாகிட முடியும்.
8. முரண்பாடுகளைத் தீர்த்துக்கொள்ளலாம்.
9. ஆழமான மனவெழுச்சிகளை வெளிப்படுத்தலாம்.
10. மகிழ்ச்சியை வசப்படுத்திட முடியும்.

(2 × 1 = 2 புள்ளிகள்)

(iii) தொலைபேசி மூலமாகத் தொடர்புபடும் இரு தரப்பினராலும் பின்பற்றப்பட வேண்டிய ஒழுக்கநெறிகள் **மூன்றினை** விவரிக்குக.

1. அழைப்பைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அழைப்பை ஏற்படுத்தியவர் தனது அடையாளத்தை வெளிப்படுத்துதல்.
2. அழைப்பினை மேற்கொள்ளும்போதும் / பெற்றுக்கொள்ளும்போதும் ஒழுக்க நெறியுடன் பேசுதல்.
3. பிறரை ஏமாற்றுவதற்காகப் பயன்படுத்தக்கூடாது.
4. மற்றவர்களுக்கு இடையூறு ஏற்படுத்தும்விதத்தில் பேசாது இருத்தல்.
5. பொது இடங்களில் தொலைபேசியை செயலிழக்கச் செய்தல் அல்லது நிசப்தமாக்கி வைத்தல்.
6. தொலைபேசி ஊடாக வருகின்ற அறிந்திராதோர் அழைப்புகளுக்கு துலங்கள் காட்டாது இருத்தல்.

(1 × 3 = 3 புள்ளிகள்)

(iv) பாடத்துடன் தொடர்புடைய தகவலை வழங்குவதற்காக லக்ஷ்மி மின்னஞ்சலைப் பயன்படுத்தினார் எனின், பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகள் **நான்கினை** விவரிக்குக.

1. ஒரே தடவையில் பலருக்குத் தகவலை அனுப்பமுடியும்.
2. உலகில் எப் பிரதேசத்தில் இருந்தாலும் மின்னஞ்சலை அனுப்பவும், பெற்றுக்கொள்ளவும் முடியும்.
3. செவிப்புல, கட்புல,கட்புல– செவிப்புல தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் ஆற்றல்.
4. தனிநபர் அல்லது அலுவலக பெயரில் மின்னஞ்சல் பெற்றுக் கொள்ளலாம்.
5. தகவல்களை தரவிறக்கம் செய்யக் கூடிய ஆற்றல்.
6. இரகசியத் தன்மை பேணக்கூடிய ஆற்றல்.
7. பெற்றுக் கொள்பவர் தான் அத் தகவலை வாசிக்கும் வரை சேமித்துவைக்கக்கூடியதாக இருத்தல்.
8. ஒப்பிட்டளவில் செலவு குறைவு.
9. அனுப்பும் மற்றும் பெற்றுக் கொள்ளும் தகவல்களை ஒழுங்குமுறையில் சேமித்து வைக்கும் ஆற்றல்

(1 × 4 = 4 புள்ளிகள்)

**3.** செவிப்புல - கட்புல ஊடகங்களின் வடிவம் மற்றும் உள்ளடக்கம் வெவ்வேறு விதமானது.

(i) தொலைக்காட்சி நாடகங்களில் ஆண் மற்றும் பெண் சித்திரிக்கப்படும் விதம் பற்றிய கற்கையின்போது முக்கியத்துவம் பெறும் எண்ணக்கரு யாது ?

ஆண் – பெண் சமூகத்தன்மை.

( 1 புள்ளி)

(ii) பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு தொலைக்காட்சி நாடகங்களை வகைப்படுத்தக்கூடிய **இரண்டு** முறைகளை விவரிக்குக.

1. ஓரங்க நாடகங்கள்.
2. பல்வித அம்ச நாடகங்கள்.
3. தொடர் நாடகங்கள்.

(1 × 2 = 2 புள்ளிகள்)

(iii) வானொலிக்காகப் பிரதி எழுதும்போது பூர்த்திசெய்ய வேண்டிய **மூன்று** நிபந்தனைகளை விவரிக்குக.

1. பிரதி எழுதுபவர் நிகழ்ச்சி பற்றிய பூரண அறிவைப் பெற்றிருக்கவேண்டும்.
2. நிகழ்ச்சி அறிமுகம் மற்றும் முன் ஆயத்தமாதல்.
3. யாருக்கு? எந்த நேரத்திற்கு? என்ன? ஏன்? என்ன காரணி? யாருக்காக முதலான காரணிகள் பற்றி இங்கு அவதானம் செலுத்த வேண்டும்.

4. தாம் எழுதும் நிகழ்ச்சியில் பெறுநரை இனங்காணுதல், பெறுநரது பொருளாதாரம், இரசணை மட்டம் பற்றிய பூரண அறிவு காணப்படவேண்டும்.
5. பிரதி எழுதுதல் பற்றிய முன்னாயத்தம், நிகழ்ச்சியின் நோக்கம், முன்வைக்கும் முறை, பயன்படுத்தும் முறை, இலக்குப் பெறுநர் மற்றும் முன்வைக்கும் நேரம் பற்றி அவதானம் செலுத்துதல்.
6. மொழிநடை.
7. தொடர்பாடல் அடிப்படை.
8. செவிமடுக்கும் அடிப்படை.
9. ஒலி அடிப்படை.

(1 × 3 = 3 புள்ளிகள்)

(iv) நவீன தொலைக்காட்சி வர்த்தக ஒளிபரப்பின் தாக்கம் பற்றிக் கீழ்க்காணும் காரணிகளின் துணையுடன் கலந்துரையாடுக.

A - பொருள்கள் மற்றும் சேவை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தல்
B - வியாபார அனுசரணையில் சார்ந்திருத்தல்
C - பாரியளவிலான வர்த்தக ஒளிபரப்பு மற்றும் புதிய நுகர்வுப் பண்பாடு
D - விமர்சனரீதியான பார்வையாளர்களின் (Audience) முக்கியத்துவம்

**A) பொருள்கள் மற்றும் சேவை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தல்,**

புதிய பொருள்கள் மற்றும் சேவைகள் பற்றி நுகர்வோருக்கு அறியப்படுத்தல் மற்றும் தூண்டுதல் வர்த்தக ஒளிபரப்பாகும். நுகர்வோருக்குப் பொருள் மற்றும் சேவைகளைத் தெரிவு செய்யும் ஆற்றல், விலை மற்றும் அவற்றின் வரையறைகள், பெற்றுக்கொள்ளும் இடம் பற்றிய அறிவு, மற்றும் அநாவசிய தேவைகள் என்பன உருவாகும்.

**B) வியாபார அனுசரணையில் சார்ந்திருத்தல்.**

தொலைக்காட்சி அலைவரிசைகள் பெரும்பாலும் இயங்குவது வியாபார நிறுவனங்களின் அனுசரணையுடனேயாகும், அதனால் அவை நுகர்வோரைத் தூண்ட அதிக போட்டித்தன்மையுடன் செயற்படும். தொலைக்காட்சி ஊடக உள்ளடக்கத்தின் மீது அனுசரணையாளர்கள் நேர்மறை மற்றும் எதிர்மறையான தாக்கங்களைச் செலுத்துவர். அதனால் நேர்மறையான நிகழ்ச்சிகளுக்கான வெளி குறைவடையலாம் .

**C) பாரியளவிலான வர்த்தக ஒளிபரப்பு மற்றும் புதிய நுகர்வு பண்பாடு**

பாரியளவிலான வர்த்தக ஒளிபரப்பின் தாக்கத்திலிருந்து மீள்வது தொலைக்காட்சிப் பெறுநர்களுக்கு கடினமாக உள்ளது. பார்வையாளர்களது அன்றாட நிகழ்ச்சி நிரல் தொலைக்காட்சி ஊடகத்தின் அடிப்படையில் தயாரிக்கப்படுதல், மனப்பாங்கு மற்றும் நடத்தைசார் மாற்றங்களுக்கு உள்ளாகுதல் மற்றும் பாரியளவிலான வர்த்தக ஒளிபரப்பின் விளைவாக அநாவசியமான தேவைகள் என்பனவும் பார்வையாளரிடம் உருவாகியுள்ளது.

**D) விமர்சனரீதியான பார்வையாளர்களின் முக்கியத்துவம்.**

விமர்சனத்திறன் மூலமாகத் தொலைக்காட்சி வர்த்தக ஒளிபரப்பின் எதிர்மறையான தாக்கங்களை இழிவளவாக்கலாம்.

வர்த்தக ஒளிபரப்புக்களில் பெறுநரைத் தூண்டப் பயன்படுத்தப்படும் உபாய வழிகளை இனங்காணலாம். தமக்குத் தேவையானவற்றை மாத்திரம் தெரிவு செய்யும் ஆற்றல் இதன் மூலம் கிடைக்கும்.

(1 × 4 = 4 புள்ளிகள்)

**4.** தொடர்பாடல் தகவல் 'பரிவர்த்தனை' (Transaction) என அறியப்படும்.

(i) நவீன தகவல் பரிவர்த்தனையின்போது பயன்படுத்தப்படும் இலத்திரனியல் செய்திப்பத்திரிகைகளின் பொதுப் பண்புகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

1. உடனடியாகச் செய்தியைத் தெரிந்துகொள்ளும் வசதி.
2. களஞ்சியப்படுத்தக்கூடிய வசதி.
3. மீண்டும் மீண்டும் வாசிக்கும் வசதி.
4. தகவலுக்கு ஏற்ப வகைப்படுத்தல் இடம்பெறுதல்.
5. காலம் சென்றும் பாவனை செய்ய முடியும்.
6. பாவனையாளர்களின் எதிர்வினைகளைத் துரிதமாகப் பெற்றுக்கொள்ளும் வசதி.
7. வேறு மூலங்கலிருந்தும் தகவலைப் பெற்றுக் கொள்ளும் வசதி.

(1/2 × 2 = 1 புள்ளி)

(ii) தமது வியாபார நிலையத்திற்குக் குறுந்தூர தொலைக்காட்சிச் சுற்றுக் கமராவினைப் (CCTV) பயன்படுத்த உரிமையாளர் முடிவு செய்தார். இதன்மூலம் கிடைக்கப்பெறும் நன்மைகள் **இரண்டினை** விவரிக்குக.

1. பணியாளர்கள் பற்றிய கண்காணிப்பை மேற்கொள்ள முடியும்.
2. வியாபார நிலையத்தினுள் களவு, கொள்ளை முதலான நடவடிக்கைகள் இடம்பெறுதல் இழிவளவாகுதல்.
3. களவு அல்லது கொள்ளை இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் அதை இனங்கண்டுகொள்ளும் வசதி காணப்படுதல்.
4. ஒரு இடத்தில் இருந்து வெவ்வேறு இடங்களில் நிகழும் சம்பவங்களை அவதானிக்க முடியும்.
5. களஞ்சியப்படுத்தப்பட்ட தகவல்களை வேறு சந்தர்ப்பங்களில் மீள அவதானிக்க முடியும்.
6. தகவல் மூலாதாரமாகப் பயன்படுத்த முடியும்.

(1 × 2 = 2 புள்ளிகள்)

(iii) வெகுசன ஊடகத்தின் மூலம் முன்வைக்கப்படும் தகவல், சிறுவரது சமூக வாழ்க்கையில் செலுத்தக்கூடிய தாக்கம் பற்றி **மூன்று** விடயங்களினூடாக விவரிக்குக.

1. ஏற்றுக்கொள்ளப்பட்ட மொழிநடை மாற்றமடைதல்.
2. மேலைத்தேய இரசனைக்குப் பழக்கப்படுதல்.
3. ஊடக நிகழ்ச்சிகளில் நடித்துக்காட்டப்படும் கதாபாத்திரங்கள் சிறுவர்களின் வீரதீரர்களாக உருப்பெறுதல்.
4. எங்களது சமூகப் பண்பாட்டிற்குப் பொருந்தாத நாகரீகங்களில் ஈடுபடுதல்.
5. ஊடகங்கள் வாயிலாக வன்முறை சார்ந்த நிகழ்ச்சிகளை அடிக்கடிப் பார்ப்பதனாலும், வாசிப்பதனாலும் சிறுவர்கள் வன்முறைக்குத் தூண்டப்படுதல்.
6. பொருத்தமற்ற பழக்கவழக்கங்களில் ஈடுபடுவதனால் காலத்தையும், பணத்தையும் விரயமாக்குதல்.
7. பயனுறுதியற்ற விருப்பங்களின்பால் சென்று வாழ்கைத் தோல்விக்கு உள்ளாகுதல்.
8. சமூகத் தொடர்புகள் எல்லைக்குட்படுதல்.
9. தனிமைப்படுத்தப்படுதல்.
10. அநாவசியமான நுகர்வுப் பழக்கம் உருவாகுதல்.

(1 × 3 = 3 புள்ளிகள்)

(iv) கீழ்க்காணும் விடயங்களுள் **இரண்டு** விடயங்கள் தகவல் அறிக்கையிடலின்போது முக்கியத்துவம் பெறும் விதத்தினை விவரிக்குக.

(a) - துல்லியத்தன்மை

(b) - நடுநிலைத்தன்மை

(c) - தெளிவானதன்மை

(d) - நம்பகத்தன்மை

a) **துல்லியம்**

தகவலோடு சம்பந்தப்பட்ட சகல விடயங்களும் உண்மையானதாக இருத்தல், உறுதிப்படுத்தப்பட்ட முக்கிய விடயங்களை வெளிப்படுத்திக்காட்டுதல், சரியானவையாக இருத்தல் ஆகியவை துல்லியமான அறிக்கையிடலில் அடங்கும்.

மக்களுக்கு வெளிப்படுத்தப்படுகின்ற தகவல் உண்மையானதாக இருக்க வேண்டுமாயின் அவற்றின் உள்ளடக்கத்தில் சம்பந்தப்பட்ட நபர்களின் பெயர், இடம், தொழில், திகதி போன்ற சகல விடயங்களும் சரியானவையாகவும் உண்மையானதாகவும் இருத்தல் அவசியம்.

b) **நடுநிலை**

தனிப்பட்ட விருப்புக்கள் நன்மைகள், குறிக்கோள்கள் தவிர்த்து அனைத்து தரப்பினர்களது அபிப்பிராயங்களும் உள்ளடங்கும் வகையில் அறிகையிடல்.

c) **தெளிவான தன்மை**

எளிமையான, சிக்கலில்லாத மொழி நடையில் எழுதுதல். பொதுவான பிரயோக மொழி பயன்படுத்தல். தொழினுட்ப, கலைச் சொற்களை அதிகளவில் பயன்படுத்துதலைக் குறைத்தல். முன்வைக்கப்படும் விடயங்களை சரியான வகையில் கிரகித்துக் கொள்ளக் கூடிய மொழி நடையை பயன்படுத்துதல் வேண்டும்.

d) **நம்பகத் தன்மை**

பெற்றுக்கொள்ளும் தகவல்களில் நம்பிக்கைகொள்ளமுடியுமாக இருப்பதையே இங்கு நம்பகத்தன்மை என்று கூறலாம். துல்லியம், நடுநிலை, தெளிவான தன்மை ஆகியன ஒன்று சேரும்போது அத் தகவல் மீது நம்பகத்தன்மை ஒன்று கட்டியெழுப்பப்படுகின்றது. இவற்றில் ஒன்று குறையினும் நம்பகத்தன்மை வீழ்ச்சியடையலாம்.

(2× 2 = 4 புள்ளிகள்)

**5.** (i) மென்செய்திகள் என்றால் என்ன ?

- சமூகத்தில் அதிக பாதிப்பை ஏற்படுத்தாத ஆனால் பலரது கவனத்தையும், விருப்பத்தையும் பெற்ற மானிட உணர்வுகளை தூண்டுகின்ற செய்திகள் மென் செய்திகள் ஆகும். இங்கு பயன்படுத்தப்படும் மொழி படைப்பாக்கமிக்க மொழியாவதோடு இத்தகைய செய்திகளை வாசிக்கும் வாசகர் மகிழ்வூட்டலைப் பெறுவர். அதேபோல் கோபம், கவலை முதலான உணர்வுகளைத் தூண்டும் செய்திகளும் இதிலடங்கும்.

(1 புள்ளி)

(ii) அரச ஊடக நிறுவனமான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் பற்றிய தீர்மானங்களை மேற்கொள்ளத் தொடர்புபடும் **இரு** தரப்பினரைப் பற்றிச் சுருக்கமாக அறிமுகம் செய்க.

1. தலைவர்.
2. பணிப்பாளர் சபை.
3. பிரதம நிறைவேற்று அதிகாரி.
4. ஊடகவியலாளர்கள்.
5. வெகுசனம்.

தலைவர்

- அரச கூட்டுதாபனம் அல்லது அரச கம்பனியின் தலைமை பொறுப்பில் இருப்பவர்.
- இவர் அரசினால் அல்லது அதற்குப் பொறுப்பான அமைச்சரால் நியமிக்கப்படுவார்.

பணிப்பாளர் சபை

- பங்குதாரர்களால் இவர்கள் நியமனம் இடம்பெறும்.
- அரசினால் நியமனம் மேற்கொள்ளப்படுவதால் இச்சபை அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருக்கும்.

(1 × 2 = 2 புள்ளிகள்)

(iii) அரச ஊடகப் பிரதானி ஒருவருக்குத் தனது உத்தியோகபூர்வ கடமையின்போது தகவல் முக்கியத்துவம் பெறும் சந்தர்ப்பங்கள் **மூன்றை** விவரிக்குக.

1. நிறுவனம்சார் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு.
2. நிறுவன முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு.
3. நிறுவனத்துடன் தொடர்புடைய படைப்பாக்கரீதியான நடவடிக்கைகளுக்கு.
4. சகல நிறுவனங்கள் மற்றும் சமூகக் குழுக்களுக்கிடையே பரஸ்பரத் தொடர்பை ஏற்படுத்துவதற்கு.
5. தமது நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்களுடன் செயற்பாடுகளில் ஈடுபட.

(1 × 3 = 3 புள்ளிகள்)

(iv) கீழ்க்காணும் சந்தர்ப்பங்களினூடாக வெகுசன ஊடகம், சமூகத்தின்மீது நேர்மறையாக மற்றும் எதிர்மறையாகத் தாக்கம் செலுத்தும் விதம் பற்றி வெவ்வேறாகத் தெளிவுபடுத்துக.

A - நுகர்வுக் கோலம்

B - இரசனை

**நுகர்வுக் கோலம்**

நேர்மறையாக ஏற்படும் தாக்கம்.

1. நிகழ்ச்சிகளுக்குப் பழக்கப்படுதல்.
2. கல்வி அறிவூட்டும் நிகழ்ச்சிகளை அறிந்துகொள்ளல்.
3. புதிய உணவுகளைத் தெரிவு செய்தல்.
4. தேவையான பொருட்கள், சேவைகளைப் பெறுதல்.
5. தொழில்வாய்ப்புகளை அறிந்து கொள்ளல்.
6. மாற்றுவழிகளைத் தெரிவு செய்யும் வாய்ப்பு கிடைத்தல்.
7. சந்தையில் காணப்படும் புதிய பொருட்கள் பற்றி அறிந்துகொள்ளல்.

எதிர்மறையாக ஏற்படும் தாக்கம்

1. பொருத்தமற்ற உணவுப் பழக்கவழக்கங்களுக்கு உட்படுதல்.
2. புதிய நோய்களுக்கு ஆட்படல்.
3. உடனடி உணவுகளுக்கு அடிமையாகுதல்.
4. தேவைக்குப் பொருத்தமற்ற பொருட்களை நுகரத் தூண்டப்படல்.

**இரசனை**

நேர்மறையாக ஏற்படும் தாக்கம்.

1. வேறுபட்ட இரசனை வடிவங்களைப் பெற்றுக்கொள்ளல்.
2. புதியவகை கலைப் படைப்புக்கள் உருவாக்கம்பெறல்.
3. இரசனை உணர்வுமிக்க சமூகம் ஒன்று உருவாக்கம்பெறல்.
4. புதிய நவீனவகை வடிவமைப்புகளுக்கு மாற்றம் பெறல்.
   (உணவு, உடை, வாகனம், ஆபரணம்)

எதிர்மறையாக ஏற்படும் தாக்கம்

1. பொருத்தமற்ற பிறழ்வான நடத்தைகளுக்கு சிறுவர், இளைஞர்கள் மாற்றம் பெறல்.
   (அணியும் உடை, தலைமுடி அலங்காரம்)
2. சினிமா, தொடர் நாடகங்களில் வெளிப்படுத்தப்படும் போதைவஸ்து முதலான பொருத்தமற்ற பழக்கவழக்கங்களைப் பின்பற்றுதல்.
3. வன்முறையான விளையாட்டுகளுக்கு அடிமையாதல்.
4. வன்முறையான பண்பாட்டு இரசனைக்கு உட்படல் (வன்முறை காட்சிகள், கொலை, கொள்ளை, பாலியல் துஷ்பிரயோகம்)

(2 × 2 = 4 புள்ளிகள்)

**6.** இலங்கைப் பிரசையான பிரபா கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது தனது வாக்கை முதற்தடவையாகப் பயன்படுத்தினார்.

(i) இலங்கைப் பிரசையொருவர் கொண்டிருக்க வேண்டிய **இரண்டு** பண்புகளைப் பெயரிடுக.

1. குறித்த தேச எல்லைக்குள் வாழ்தல்.
2. சனநாயகவாதியாக வாழ்தல்.
3. வாக்குரிமையைப் பயன்படுத்துதல்.
4. வரி செலுத்துதல்.
5. சட்டத்தை மதித்தல்.
6. சமூக நற்காரியங்களை மேற்கொள்ளல்.
7. தேசாபிமானியாக வாழ்தல்.
8. அனைத்து மதங்களையும் அனைத்து இனத்தவர்களையும் மதித்தல்.
9. பண்புள்ள ஒருவராக தொழிலொன்றில் ஈடுபடுதல்.
10. பண்புடையவராகவும் மரியாதையுடையவராகவும் இருத்தல்.
11. குடும்பத்தில் பண்புடன் வாழ்தல்.

(1/2 × 2 = 1 புள்ளி)

(ii) ஜனாதிபதித் தேர்தலின்போது பிரசார நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப் பொருத்தமான தொலைக்காட்சி நிகழ்ச்சி வகைகள் **இரண்டினைச்** சுருக்கமாக அறிமுகஞ் செய்க.

1. செய்திகள் மற்றும் நடப்புவிடயங்கள் சார் நிகழ்ச்சி.
2. தொலைக்காட்சி அறிக்கையிடும் நிகழ்ச்சி.
3. கலந்துரையாடல்.
4. விவாதங்கள்.
5. நேரடி ஒளிபரப்பு.

**செய்திகள் மற்றும் நடப்புவிடயங்கள் சார் நிகழ்ச்சி**

தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் தொடர்பாக ஊடகவியலாளர்கள் இடையே தகவல் திரட்டுவதில் கடும் போட்டி தன்மை நிலவுவதனால் இவ்வாறான நிகழ்ச்சிகளைக் தேர்தல் பிரசாரத்துக்கு பயன்படுத்துவது பொருத்தமானது.

**தொலைக்காட்சி அறிகையிடும் நிகழ்ச்சி**

தேர்தல் சம்பந்தமான அபிப்பிராயங்கள் மற்றும் கருத்துக் கணிப்புக்கள், வேட்பாளர்களுடைய வாக்குறுதிகள் போன்றவற்றை மக்களுக்கு அறிக்கையிட்டு தெளிவுபடுத்தக் கூடியதாக இருக்கின்றமை.

**கலந்துரையாடல்**

போட்டியிடுகின்ற வேட்பாளர்களை அழைத்துவந்து நேரடி கலந்துரையாடல் நிகழ்வுகளை நடாத்துதல்.

**விவாதங்கள்**

வேட்பாளர்களை நேரடியாகப் பங்குபெறச்செய்து ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கும், எதிர் தரப்பினரின் தேர்தல் விஞ்ஞாபன விளக்கத்திற்கும் விவாத நிகழ்ச்சிகள் மூலமாக விளக்கமளித்தல்.

**நேரடி ஒளிபரப்பு**

பிரச்சார கூட்டங்களில் வேட்பாளர்கள் கூறும் விடயங்களையும் அவர்களுக்கு ஆதரவு வழங்குகின்றவர்களின் கருத்துக்களையும் நேரடி நிகழ்ச்சியாக ஒளிபரப்புதல்.

(1 × 2 = 2 புள்ளிகள்)

(iii) தேர்தல் மேடையொன்றில் வேட்பாளர் ஒருவர் ஆற்றும் உரையை காட்சிப்படுத்தும்போது இலக்கமுறைப் புகைப்படக்கலை (Digital Photography) பயன்படுத்தப்படுவது மிகவும் பொருத்தமானது. அதற்கான **மூன்று** காரணங்களை விவரிக்குக.

1. உயர் ஒளி உணர்வு வீச்சைக்காட்டக்கூடியதாகையால் குறைந்த ஒளி உள்ள போதும் புகைப்படம் எடுக்க கூடியதாக இருத்தல்.
2. ஆரம்பத்தில் டிஜிட்டல் கமராவைக் கொள்வனவு செய்ய அதிக விலை செலுத்த வேண்டி இருப்பினும் புகைப்படச் சுருளின் அவசியமின்மையும் தேவையற்ற புகைப்படங்களை அழித்துவிடக் கூடியதாக இருப்பதும் இலாபகரமானதாகும்.
3. எடுத்த புகைப்படத்தை உடனடியாகப் பார்வையிடக் கூடியதாக இருத்தல்.
4. இரசாயண முறையில் சீர்செய்வதற்கு நேரத்தை செலவிடாமை சிறப்பம்சமாகும்.
5. தேவையற்ற புகைப்படங்களை அழிப்பதனூடாக நினைவக அட்டையை பயனுள்ள தேவைகளுக்கு மட்டும் பயன்படுத்தலாம்.
6. இலகுவாக கணனியுடன் தொடர்பினை ஏற்படுத்துதல்
7. செயற்திறனுடன் கூடிய செம்மையாக்கத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வசதி.

8. மின்னஞ்சல், இணையம், கையடக்கத் தொலைப்பேசி போன்ற வலைப்பின்னல்களில் டிஜிட்டல் புகைப்படங்களை உட்படுத்துவது இலகு.
9. டிஜிட்டல் தரவுக் கோவைகளாக களஞ்சியப்படுத்திக் கொள்வதனால் பல வருடங்களின் பின்பும் புகைப்படங்களின் தரம் குறையாது பாதுகாத்தல்.
10. உயர்தரத்தினைக் கொண்ட கருவிகளாயினும் தனியொருவரால் இலகுவாகக் கையாளும் வசதி .
11. டிஜிட்டல் கமரா, கைத்தொலைபேசி, மடிக்கணனி போன்றவற்றின் நினைவகத்தில் பதிவு செய்து கொள்வதன் மூலம் அநேக தொடர்பாடல் செயற்பாடுகளையும் இலகுவாக பயன்படுத்திக் கொள்ளல் .

(1 × 3= 3 புள்ளிகள்)

(iv) தேர்தலுக்காக இடம்பெறும் குழு ஒன்றுகூடல்களின்போது பயன்படுத்தப் பொருத்தமான எறிவையற்ற உபகரணங்கள் **நான்கின்** பொருத்தப்பாட்டினை விளக்குக.

கரும் பலகை
வெண் பலகை
பச்சைப் பலகை
காந்தப் பலகை
ஒட்டும் பலகை
செய்திப் பலகை (அறிவித்தற் பலகை)
பக்கப்புரட்டி

**கரும் பலகை**

- தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தமது தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை பங்கு பற்றுபவர்களுக்கு வெண்கட்டியினால் எழுதியும், வரைபடங்கள் மூலமாகவும் விளக்கமளிக்க பயன்படுத்துகின்றார்கள்.
- வரைப்படங்கள், கட்சிகளின் சின்னங்கள், இலக்கங்கள் மற்றும் வாக்களிப்பு முறை போன்றவற்றை காட்சிப்படுத்தவும் பயன்படுத்தலாம்.

**வெண் பலகை**

- தேர்தல் நடைமுறைகளை குழுக்களுக்கு எழுதியும் வரைந்தும் காட்டக்கூடிய வசதி, அதிகமாக விளக்கத்தை வழங்கக்கூடிய உபகரணமாகப் பயன்படுத்தலாம்.

**பச்சைப் பலகை**

- கரும்பலகைக்குப் பதிலாக பயன்படுத்தக்கூடிய உபகரணமாகும். இதில் எழுத்து மூலமான விளக்கத்தையும், படங்கள் வரைந்தும் விளக்கமளிக்கக்கூடியதாகக் காணப்படுகின்றது.

**காந்தப் பலகை**

- நிழற் படங்களை பலகையில் தொங்கவிடக்கூடியதாக இருக்கின்றமை, வரைப்படங்கள் மற்றும் சின்னங்கள் தொடர்பாகவும், வாக்களிக்கும் முறை தொடர்பாகவும் விளக்கங்களை வழங்குவதற்கு பயன்படுத்தலாம்.

**செய்திப் பலகை**

- அறிவித்தல்கள், துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள் மற்றும் படங்கள் போன்றவற்றை காட்சிப்படுத்துவதற்கும், விளக்கம் பெறுவதற்கும், அறிவித்தலை பின்பற்றிக்கொள்ளவும் பயன்படுத்தலாம்.

**பக்கப் புரட்டி**

– பல்வேறு தேர்தல் விபரங்களை வழங்குவதற்கான விபரங்கள், முறைகளை முன்னாயப்படுத்தி அவற்றை பங்குபற்றுபவர்களுக்கு வெவ்வேறு பக்கங்களுக்கூடாக விளக்கமளித்தல்.

(1 × 4= 4 புள்ளிகள்)

**7.** (i) வாய்மொழியல்லாதத் தொடர்பாடல் என்றால் என்ன ?

சொற்கள் மற்றும் மொழிப் பயன்பாடு இன்றி மேற்கொள்ளப்படும் தொடர்பாடல் வாய்மொழியல்லாத் தொடர்பாடல் எனப்படும்.

உதாரணம்:- குறியீடுகள், உடல்மொழி, கண்ணசைவு, நிறங்கள்.

(1 புள்ளி)

(ii) வாய்மொழியல்லாத விதத்தில் தகவல்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு எழுத்துமூலத் தொடர்பாடலின்போது பயன்படுத்தப்படும் விதிமுறைகள் **இரண்டினைப்** பெயரிடுக.

1. குறியீடுகள்.
2. புகைப்படம்.
3. எழுத்துக்களின் அளவு.
4. எழுத்துக்களின் வடிவம்.
5. வரைபடம்.
6. அட்டவணை.
7. இலட்சிணை.
8. சித்திரம்.
9. நிறங்கள்
10. படங்கள்.

(1 × 2= 2 புள்ளிகள்)

(iii) வெகுசன ஊடகங்களில் உள்ளடங்கும் தகவலின் வெளிப்படைத்தன்மையை விமர்சனரீதியான பெறுநரால் மாத்திரமே காணக்கூடியதாயிருக்கும் அத்தகைய பெறுநரிடம் காணப்படும் பண்புகள் **மூன்றினை** விளக்குக.

1. வெகுசன ஊடகத்தின் வழியாக முன்வைக்கின்ற விடயங்களை சரியாக விளங்கிக் கொள்ளும் திறன்.
2. ஊடகத்தினூடாக மறைக்கப்படுபவை எவை என்பதனை விளங்கிக் கொள்ளும் திறன்.
3. வெகுசன ஊடகங்கள் எக் குறிக்கோளுடன் செயற்படுகின்றன என்பதனை புரிந்து கொள்ளும் திறன்.
4. வெகுசன ஊடகங்களில் முன்வைக்கப்படும் முயற்சிகள் தன்னை எத்தகைய நபராக மாற்றுகின்றது என்பதனை விளங்கும் திறன்.
5. பெறுநரை தூண்டுவதற்காக ஊடகங்களினால் மேற்கொள்ளப்படும் தந்திர உபாயங்களை விளங்கிக் கொள்வதற்கான திறன்கள்.
6. ஊடகங்கள் எவ்வாறான தகவலை வழங்கிய போதும் தமக்கு தேவையானவற்றை மாத்திரம் வடிகட்டிப் பெற்றுக் கொள்ளும் திறன்.
7. ஊடகச் செயற்பாடுகள் தொடர்பான தமது செயற்பாட்டினை தனிப்பட்ட ரீதியிலும் ஒழுங்கமைப்பு ரீதியாகவும் ஊடகங்களுக்கு முன்வைத்தல் ஊடாக ஊடகங்களுடன் இடைத்தொடர்பினை பேணுவதற்குரிய ஆற்றல்கள்.

(1 × 3= 3 புள்ளிகள்)

(iv) தகவலைப் படைப்பாக்கரீதியாகத் தொடர்பாடல் செய்யும்போது பயன்படுத்தப்படும் கீழ்க்காணும் வெளியீட்டு விதிகளை உதாரணங்களுடன் விளக்குக.

(1) கட்புல வெளியீட்டு விதி

(2) செவிப்புல வெளியீட்டு விதி

**கட்புல வெளியீட்டு விதி**

காட்சி கொண்டு தொடர்பாடல் மேற்கொள்ளப்படல். ஆதிகால மனிதனால் எளிமையாக சமிஞ்ஞை, எழுத்து, சித்திரங்கள் ஊடாக கட்புல தொடர்பாடல் மேற்கொள்ளப்பட்டது. இது கட்புல வெளியீட்டு விதியாகும்.

உதாரணம் :- எழுத்து, அபிநயம், படம், சித்திரம், குறியீடுகள், சமிஞ்ஞை, அட்டவணை, வரைபடம், நிறங்கள்

**செவிப்புல வெளியீட்டு விதி**

செவிப்புலத்தை அடிப்படையாகக் கொண்ட தொடர்பாடல் செவிப்புல வெளியீட்டு விதி எனப்படும். மேளச்சத்தம், ஊச்சத்தம் போன்ற பாரம்பரிய ஊடகத்தின் ஊடாக ஆரம்பமான செவிப்புல தொடர்பாடல் இன்று வளர்ச்சியடைந்துள்ளது.

உதாரணம்:- வானொலி ஊடகம், குரல் ஒலிகள், இசைக் கருவிகள், இயற்கையொலி, மணியோசை , இசை , அமைதி.

(2 × 2= 4 புள்ளிகள்)